


**14.04.2025**

**தலைப்பு செய்திகள்**

- நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்காக மத்திய அரசு செயலாற்றி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- அரசியல் சாசன சிற்பி டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த தினத்தை ஒட்டி நாடாளுமன்ற வளாகத்தில் அன்னாரது திருவுருவ படத்திற்கு தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.
- சமத்துவ சமூகத்தை உருவாக்க ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் கிழக்கு கடற்கரை பகுதியில் 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் நள்ளிரவு முதல் அமலுக்கு வருகிறது.
- உலக டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மணிக்கா பத்ரா, ஸ்ரீஜா அகுலா ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**இனி விரிவான செய்திகள்**

***********

பிரதமர்

நாட்டின் அனைத்து தரப்பு மக்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக மத்திய அரசு செயலாற்றி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசன சிற்பி டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பிறந்த தினத்தை ஒட்டி ஹரியானா மாநிலம் ஹிசார் - அயோத்தியா இடையேயான முதல் விமான சேவையை துவக்கிவைத்து பேசிய அவர், நாடுமுழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் 150 விமான நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், உடான் திட்டத்தின் கீழ் விமான பயணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாகவும் பிரதமர் கூறினார்.

தொடர்ந்து பிரதமர் இன்றுமாலை யமுனா நகரில் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 800 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம்,

மொஹர்பூரில் உயிரி எரிவாயு ஆலை மற்றும் பாரத்மாலா திட்டத்தின் கீழ் ஆயிரத்து 70 கோடி ரூபாய் மதிப்பிலான 14 கிலோ மீட்டர் நீள ரிவேரி புறவழிச்சாலை திட்டத்தையும் தொடங்கிவைக்கிறார்.

***********

**அம்பேத்கர் பிறந்த தினம்**

அரசியல் சாசன சிற்பி டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 135ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவ படத்திற்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு,

குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப் தன்கர்,

பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்ட தலைவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். குடியரசு தலைவர் வெளியிட்ட செய்தியில் அம்பேத்கரின் கொள்கைகளை பின்பற்றி சமூக நல்லிணக்கம் மற்றும் சமத்துவ உணர்வை உள்ளடக்கிய தேசத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் டாக்டர் அம்பேத்கரின் கொள்கைகளும் லட்சியங்களும் சுயசார்பு மற்றும் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உத்வேகத்தை அளிப்பதாக கூறியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் அண்ணல் அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்கள் பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் பொருளாதார உரிமைகளை மீட்டெடுத்து நவீன இந்தியாவை உருவாக்க விரும்பியவர் என்றும், அவரது கொள்கைகள் இளைய தலைமுறையினரை ஊக்குவிப்பதாகவும் கூறியுள்ளார்.

***********

**அம்பேத்கர் தமிழகம்**

தமிழகத்தில் அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாள் சமத்துவ நாளாக இன்று கொண்டாடப்படுகிறது.

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து சமத்துவ நாள் உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சென்னையில் அண்ணல் அம்பேத்கரின் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்கள் மற்றும் வன உரிமை சட்டத்திற்கான வரைபடத்தை இன்று வெளியிட்டு பேசிய முதலமைச்சர் உயர்கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து வருவதாக கூறினார்.

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொல்குடி திட்டம் செயல்படுத்தப்படுவதாக கூறிய முதலமைச்சர் சமத்துவ சமூகத்தை உருவாக்க ஒன்றிணைந்து செயல்படுவோம் என கூறினார்.

**வாய்ஸ்**

இந்நிகழ்ச்சியில் 228 கோடி ரூபாய் மதிப்பிலான விடுதி கட்டிடங்கள், பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள், சமுதாய நலக்கூடங்கள், கல்லூரி விடுதிகளில் கற்றல் கற்பித்தல் கூடம் மற்றும் ஆயிரம் பழங்குடியினர் குடியிருப்புகள் ஆகியவற்றை முதலமைச்சர் திறந்துவைத்தார்.

49 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு 104 கோடியே 75 லட்ச ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்கினார்.

**மாநிலம் முழுவதும் அண்ணல் அம்பேத்கருக்கு இன்று** மரியாதை செலுத்தப்பட்டு நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

**வேலூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில்** நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான நல திட்ட உதவிகளை வழங்கினார்.

**சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில்** நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.பெரியகருப்பன் ஆயிரத்து 14 பயனாளிகளுக்கு 3 கோடியே 34 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நல திட்ட உதவிகளை வழங்கினார்.

**விருதுநகரில்** அமைச்சர்கள் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமசந்திரன் திரு.தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என உறுதி ஏற்கப்பட்டது.

**சேலத்தில் அம்பேத்கர் உருவசிலைக்கு** அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

***********

**அமித்ஷா**

நாட்டில் போதை பொருள் நடமாட்டத்தை ஒழிப்பதில் மத்திய அரசு சமரசமின்றி செயல்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் குஜராத் கடற்பகுதியில் சர்வதேச கடல் எல்லை அருகே ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது, போதை பொருட்களுக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளுக்கு கிடைத்த வெற்றி என்றார்.

***********

**மீன்பிடி தடைக்காலம்**

தமிழகத்தில் கிழக்கு கடற்கரை பகுதியில் 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருகிறது.
வரும் ஜூன் 14-ம் தேதிவரை நடைமுறையில் இருக்கும் இம்மீன்பிடி தடைக்காலத்தில் விசைப்படகுகள் மற்றும் இழுவை படகுகளுக்கு தடைவிதிக்கப்படுகிறது.
நாகை மாவட்டத்தில் இந்த தடை உத்தரவை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் எச்சரித்துள்ளார்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**.. வாய்ஸ் ..**

***********

**தமிழ் புத்தாண்டு**

தமிழ் புத்தாண்டு இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.
இந்நாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி தமிழில் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் புத்தாண்டு வளத்தையும், ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டுவரட்டும் என்று வாழ்த்தியுள்ளார்.
மாநிலம் முழுவதும் உள்ள திருக்கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.
மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அம்மனை தரிசித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

தஞ்சை பட்டுக்குடி கிராமத்தில் வருட பிறப்பை ஒட்டி விவசாயம் செழிக்க கிராம பொதுமக்கள் ஒன்றினைந்து நல்லேறு கட்டும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.
திருவண்ணாமலை கிரிவல பாதையில் திருநேர் அண்ணாமலையார் திருக்கோவிலில் சிவலிங்கத்தின் மீது சூரிய ஒளி படும் நிகழ்வை ஏராளமானோர் தரிசித்தனர்.
சீர்காழி சட்டடை நாதர் சுவாமி திருக்கோவிலில் சிறப்பு கோ பூஜை இன்று நடைபெற்றது.

***********

**நீத்தார் நினைவுதினம்**

தேசிய நீத்தார் நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.
பணியின்போது உயிரிழந்த தீயணைப்பு படைவீரர்களின் நினைவாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தீயணைப்பு துறை சார்பில் விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
நெல்லை தர்மபுரி மாவட்டங்களில் தீயணைப்புத்துறை சார்பில் தீயணைப்பு வீரர்கள் நினைவு தூணிற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.
1944-ஆம் ஆண்டு மும்பை துறைமுகத்தில், விக்டோரியா கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆயிரத்து 300-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததை நினைவுகூறும் வகையில் ஆண்டுதோறும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

***********

**அக்னிவீர்**

ராணுவத்தில் அக்னி வீரர்கள் ஆள்சேர்ப்பிற்கு விண்ணப்பிக்க வரும் 25ஆம் தேதிவரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக திருச்சிராப்பள்ளி ராணுவ ஆள் சேர்ப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.
திருச்சி கரூர் பெரம்பலூர் புதுக்கோட்டை சிவகங்கை தூத்துக்குடி உள்ளிட்ட 16 மாவட்டங்களை சேர்ந்தவர்கள் 8 பிரிவுகளில் இணையதளம் வாயிலாக இதற்கு விண்ணப்பிக்கலாம்.

***********

**ஃபசல் பீமா**

இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு மத்திய அரசின் ஃபசல் பீமா காப்பீடு திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 15 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளதாக மாவட்ட வேளாண் இணை இயக்குனர் திரு.ஸ்டீபன் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

----வாய்ஸ்----

***********

**ஒகேனக்கல்**

புத்தாண்டு மற்றும் தொடர் விடுமுறையை ஒட்டி ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

**வானிலை**

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி மற்றும் காற்றின் திசை வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
இதனிடையே நீலகிரி கோவை திருப்பூர் தேனி திண்டுக்கல் கிருஷ்ணகிரி தர்மபுரி மதுரை தென்காசி திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

***********

**இருவரி**

**கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை சுவாமி** விவேகானந்தர் நினைவு மண்டபம் இடையே அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழைப்பாலம் பராமரிப்பு பணிகளுக்காக நாளைமுதல் வரும் 19ஆம் தேதிவரை மூடப்படுவதாக ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா தெரிவித்துள்ளார்.
**கோவையில் மாநகர காவல்துறையின் பவள** விழாவை முன்னிட்டு சாலை பாதுகாப்பை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.
மாநகர காவல் ஆணையர் திரு.சரவண சுந்தர் பேரணியை கொடியசைத்து துவக்கிவைத்தார்.
**நாமக்கல் மாவட்டத்தில் தேசிய காச நோய்** ஒழிப்பு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதை அடுத்து நோய் பாதிப்பு வெகுவாக குறைந்துள்ளதாக மாவட்ட காசநோய் மைய இயக்குனர் திரு.வாசுதேவன் தெரிவித்துள்ளார்.

***********

**டேபிள் டென்னிஸ்**

சீன மக்காவோவில் நடைபெறும் உலக டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மணிக்கா பத்ரா, ஸ்ரீஜா அகுலா ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.
மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவின் மணிக்கா பத்ரா - நியூ கலிடோனியாவின் **Maylis Giret-**ஐ 11-1 11-2 16-14 11-4 என்ற செட்களில் வென்றார்.
ஸ்ரீஜா - ஆஸ்திரேலியாவின் கான்ஸ்டான்டினாவை 11-9 11-4 11-8 6-11 என்ற செட்களில் தோற்கடித்தார்.

***********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்று இரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**